**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH**

O.S.No.17/2024

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | கிருஷ்ணன் |
| Father's Name | : | சண்முகத்தேவர் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.03.2026.

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் 4ம் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. சண்முகத்தேவரின் இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ஒளிநகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது

2. 4ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ஒளிநகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது

**குறுக்குவிசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்)**

1. நான் இந்த வழக்கை வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளேன்.

2. எனது தாயை திருமணம் செய்வதற்கு முன்பு எனது தந்தை சண்முகத்தேவர், லெட்சுமியம்மாள் என்பவரை திருமணம் செய்திருந்தார் என்றால் சரிதான். அவர்களுக்கு திருமணம் நடைபெற்று சுமார் 60 ஆண்டுகள் இருக்கும்.

3. லெட்சுமியம்மாள் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது, அவர் இறந்தபிறகு எனது தந்தை, எனது தாயை திருமணம் செய்தார்.

4. இந்த வழக்கின் 2ம் வாதி, எனது தந்தைக்கும், லெட்சுமியம்மாளுக்கும் பிறந்த மகன்தான் என்றால் சரிதான்.

5. எனது தாய்க்கும், எனது தந்தைக்கும் பிள்ளைகள் 3ம் வாதி, 4ம் வாதியாகிய நான், 5ம் வாதி வரதராஜன், இறந்துபோன சகோதரர் வெங்கடேசன் என்றால் சரிதான். வெங்கடேசனுக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர்.

6. எனது தாத்தாவின் பெயர் திருமலையாண்டித்தேவர் என்றால் சரிதான், பாட்டியின் பெயர் பாக்கியத்தாயம்மாள் என்றால் சரிதான்.

7. இறந்துபோன சண்முகத்தேவருக்கு வள்ளியம்மாள், திருமலைராஜ், பத்மாவதி, கிருஷ்ணன், வரதராஜன், இறந்துபோன வெங்கடேசன், காலம் சென்றுபோன திருமலைத்தேவர், காலம்சென்றுபோன பாக்கியத்தாய் ஆகியோர்கள் சண்முகத்தேவரின் வாரிசுகள் என்றால் சரிதான்.

8. எனது தந்தைக்கு 2 மனைவிகள் உள்ளதால் தான் வட்டாட்சியரிடம் நான் கொடுத்த மனு தள்ளுபடியானது என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai